[1985 மார்ச் 11

15. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டம் என்னும் புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கக் குழுக்களுக்கான தேர்தல்கள் நடைபெறுவதற்கு வகைசெய்யும் பொருட்டு இப்புதிய சட்டத்தின் ஏற்பு விதிகளை அரசு இயற்றி வருகிறது.

16. தொழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மின்சக்தி இன்றியமையாத தூண்டுகோலாகும் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். 1984-85 ஆம் ஆண்டில், திட்டச செலவில் 25 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொகையை அரசு மின்சக்தி உற்பத்திக்காக ஒதுக்கியது; ஏழாவது திட்டத்திலும் நிதி ஒதுக்கப் பெறுவதில் இத்துறை முதன்மையான முன்னுரிமைப் பெறும் நிலையில் உள்ளது. தமிழ்நாடு மின் வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல்மின் நிலையங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதன் பலனாக மின்சக்தி உற்பத்திப் பெருமளவு உயர்ந்துள்ளது. 1983-ல் ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையில் 7,381 மில்லியன் யூனிட்டுகள் மின்சக்தி வழங்கப் பட்டது; இது 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையில் 40 சதவீதம், அதாவது 10,374 மில்லியன் யூனிட்டுகளாக உயர்ந்துள்ளது. ஆயினும், மின்சக்தி தேவை அதிகரித்துள்ளதாலும், மின் இணைப்புக்களை வழங்குவதில் தாராளமான கொள்கை பின்பற்றப்பட்ட காலத்தில் கொடுக்கப் பட்ட இணைப்புக்களால், மின்சக்தி பயன்பாட்டு அளவு மேலும் 300 மெகாவாட் அதிகரித்துள்ளது. இம்மாநில அரசு அண்மையில் அளித்துள்ள சலுகைகளில் மிக முக்கியமான சலுகை யாதெனில், 'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், குடிசைவாழ் மக்களுக்கு 15—9—1984 முதல் மின்னொளி இலவசமாக வழங்குதல், விவசாயத்திற்கு நீரேற்றுப் பொறிகளை (பம்ப் செட்டுகளை) மட்டுமே முழுமையாக நம்பியுள்ள சிறு உழவர்களுக்கு மின்சக்தியை இலவசமாக வழங்குதல் ஆகியவையாகும். ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றுப் பொறிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 75 மட்டுமே செலுத்த வேண்டும் என்ற ஒரே படித்தான கட்டணம் வீதச் சலுகை ஏனைய உழவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. அரசின் மேற்சொன்ன முடிவுகளின் காரணமாக, சுமார் 6 இலட்சம் குடிசைவாழ் மக்களும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்களும்

1985 மார்ச் 11]

பயனடைந்துள்ளனர். கல்பாக்கம் அணுமின் உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியைப் பகிர்ந்து கொள்வதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு, இம்மாநிலத்திற்குச் சாதகமாகவே முடிந்தது என்பதையும் நான் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். முதல் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் முழு மின்சக்தி 235 மெகா வாட்டும், இதே நிறனுள்ள இரண்டாம் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தி அளவில் ஒரு பாதியும் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு வழங்கப்படும் என்று மத்திய அரசு தற்போது உறுதி அளித்துள்ளது.

17. தொழில் துறையில் தமிழ்நாடு மாநிலம் சீராக முன்னேறி வருகிறது. தொழில் தொடங்குவதற்கான அனுமதிக் கடிதங்கள் வழங்குதல், அத்தகைய அனுமதிகளைத் தொழில் தொடங்குவதற்கான உரிமங்களாக மாற்றுதல் ஆகியவை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இம்மாநிலம் தொழில் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகளைக் கொண்டுள்ள போதிலும் 'தொழிற்சாலையில்லாத மாவட்டம்' என்று அறிவிப்பு இல்லாத குறை உள்ளது. 'தொழிற்சாலையில்லாத வளர்ச்சி வட்டாரத்தை' அறிவிக்க வேண்டுமென்ற கொள்கையை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். இதற்கு மத்திய அரசிடமிருந்து ஆதரவான பதிலை எதிர்பார்க்கின்றோம். மத்திய அரசின் மூலதன உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் மற்ற மாநிலங்களைவிட அதிகமான அனுமதிகள் வழங்கி தமிழ்நாடு மாநிலம் முதலிடம் பெற்றுள்ளது நமக்குப் பெருமை தருவதாகும்.

18. மத்திய அரசின் முதலீடுகளைப் பொறுத்தமட்டில், போதிய நியாயமான அளவிற்கு இம்மாநிலத்தில் முதலீடு செய்ய வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசினை வலியுறுத்தி வருகின்றதென்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் திறனளவை 2.3 மில்லியன் டன்னிலிருந்து 5.6 மில்லியன் டன்னாக உயர்த்தும் பணி நடைபெற்று வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், திருச்சிராப்பள்ளியில் ரூ. 170 கோடி செலவில் சுமார் உலோகக் கலவை ஊடுருவித் தொழிற்சாலை (Heavy Alloy Penetrator